24.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் ஆகஸ்ட் 26-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (ஆக.26) காலை 11 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில், வேளாண், தோட்டக்கலைத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர். எனவே, கூட்டத்தில், மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான தங்களது குறைகளையும், கருத்துகளையும் எடுத்துக்கூறி பயனடையும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்றார்.

### முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.60, சென்னையில் ரூ.3.80

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த

கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.61, முட்டைக்கோழி கிலோ ரூ.81.

**நாமகிரிப்பேட்டை கூட்டுறவு விற்பனை நிலையத்தில் ரூ. 30 லட்சம் மஞ்சள் ஏலம்**

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் ரூ. 30 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் நடைபெற்றது.

நாமகிரிப்பேட்டை கூட்டுறவு ஏல மையத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. நிகழ் வாரம் நடைபெற்ற ஏலத்தில் விரலி ரக மஞ்சள் 470 மூட்டைகள், உருண்டை ரக மஞ்சள் 98 மூட்டைகள், பனங்காளி 10 மூட்டைகள் என மொத்தம் 575 மூட்டைகள் மஞ்சள் விற்பனைக்கு வந்தது. இதில் விரலி ரகம் குறைந்தபட்சமாக ரூ. 7,188 முதல் அதிகபட்சமாக ரூ.10,022 வரை ஏலம் போனது. உருண்டை ரகம் குறைந்த பட்சம் ரூ. 6,819 முதல் அதிகபட்சமாக ரூ. 8,500-க்கும் ஏலம் போனது.

அதேபோல பனங்காளி ரகம் குறைந்தபட்சமாக குவிண்டால் ரூ. 15,555-க்கும் அதிக பட்சமாக ரூ.20,012-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 30 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது.

ரூ.1 கோடிக்கு பருத்தி ஏலம்: இதேபோல் வெண்ணந்தூரை அடுத்த அக்கரைப்பட்டி தொடக்கக் கூட்டுறவு வங்கியில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில், 4,357 பருத்தி மூட்டைகள் ரூ.1 கோடிக்கு ஏலம் போனது. ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்குள்பட்ட இந்த ஏல மையத்துக்கு அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல்பட்டி, உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து விவசாயிகள் 60 கிலோ கொண்ட 4,357 சுரபி ரக பருத்தி மூட்டைகளைக் கொண்டு வந்திருந்தனர். இதில், குறைந்தபட்ச விலையாக ரூ. 5,899-க்கும், அதிகபட்சமாக ரூ. 6,422-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 1 கோடிக்கு பருத்தி ஏலம் போனது. இதில், திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 50-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலம்

எடுத்தனர்.

## சிவகங்கைக்கு ஆயிரம் டன் நெல்

நீடாமங்கலத்திலிருந்து சிவகங்கை மண்டலத்துக்கு ஆயிரம் டன் பொது ரக நெல் அரவைக்காக சரக்கு ரயிலில் செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து ஆயிரம் டன் எடையுள்ள பொதுரக நெல் மூட்டைகள் 75 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு செவ்வாய்க்கிழமை கொண்டுவரப்பட்டு, நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில், சரக்கு ரயிலில்சிவகங்கை மண்டலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## பழ மரக்கன்றுகள் வழங்கும் விழா

சங்கராபுரம் அருகே மூரார்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பழ மரக்கன்றுகள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. சங்கராபுரம் தமிழ்ப் படைப்பாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த விழாவுக்கு பள்ளி உதவித் தலைமை ஆசிரியை கே.சரஸ்வதி தலைமை வகித்தார். வள்ளலார் மன்ற நூலகர் சிவஞான அடிகள், திருக்கோவிலூர் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிமாமணி சிங்கார.உதியன், ஆரம்ப பள்ளித் தலைமை ஆசிரியர் கி.செல்வராஜ், ஆசிரியர் வீ.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி உதவி ஆசிரியர் ஏ.ராமச்சந்திரன் வரவேற்றார்.

விழாவில் இயற்கை வேளாண் ஆலோசகர் ச.சதீஷ்மன்னன், வள்ளலார் மன்றச் செயலர் இரா.நாராயணன், சங்கச் செயலர் தமிழாசிரியர் அ.இராமசாமி ஆகியோர் பள்ளி மாணவ, மாணவிகள் 1,100 பேருக்கு பழ மரக்கன்றுகளை வழங்கி, அதன் அவசியம் குறித்துப் பேசினர்.

சங்கத் தலைவர் குறிஞ்சி அரங்க.செம்பியன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். சங்க துணைத் தலைவர் சி.இளையாப்பிள்ளை குறள் விளக்கம் அளித்தார். ஆசிரியர் ஏ.ஸ்ரீராம், ஆசிரியை மகேஸ்வரி, கனியார் பள்ளிக் தாளாளர் எம்.ரகுப் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் த.சீனுவாசன் நன்றி கூறினார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரியில் வரும், 26ம் தேதி, விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடக்கிறது' என, மாவட்ட கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வரும், 26 ம் தேதி காலை, 11 மணிக்கு, கலெக்டர் கதிரவன் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் அனைவரும் பங்கேற்று, தங்களின் குறைகளை தெரிவித்து, நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### ஈரோட்டில் 47 மி.மீ., மழை

ஈரோடு: ஈரோடு மாவட்டக்கில், நேற்று முன்கினம் பரவலாக மழை பெய்கது. பல நாட்களாக பகலில் கடும் வெப்பம் நிலவியது. மழை இல்லாததால் மக்கள் தவித்துப் போனார்கள். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை, மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக ஈரோட்டில், 47 மி,மீ., மழை பதிவாகியுள்ளது. பெருந்துறையில், 28 மி.மீ., சென்னிமலையில், 6, அரச்சலூரில், 2, கவுந்தப்பாடி 2.2 மி.மீ., மழை பெய்துள்ளது. பரவலான மழையால், வெப்ப சூழல் மாறி இதமான கால நிலை நிலவியது. அதே சமயம், பவானிசாகர் அணை நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மாவட்டத்தில் போதிய மழை பெய்யவில்லை. அணைக்கு நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, 352 கன அடி நீர் வந்தது.

## ஈளாடா அணையில் தண்ணீர் குறைவு

கோத்தகிரி: கோத்தகிரி ஈளாடா தடுப்பணையில் தண்ணீர் குறைந்ததால், தண்ணீர் தட்டுப்பாடு பிரச்னை விஸ்வரூபம் எடுத்துள்ளது.

கோத்தகிரி நகர மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக ஈளாடா தடுப்பணை விளங்கி வருகிறது. அணையில் இருந்து, குழாய்கள் மூலம் வரும் தண்ணீர், கேர்பெட்டா புதுாரில், சுத்திகரிக்கப்பட்டு, சக்திமலையில் சேமிக்கப்படுகிறது. பிறகு அங்கிருந்து, தாழ்வான பகுதியில் உள்ள நகர மக்களுக்கு வினியோகிக்கப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன், மொத்தக் கொள்ளளவும் நிறைந்திருந்தது. தற்போது, மதகுகள் வெளியே தெரியும் அளவுக்கு முழுமையாக தண்ணீர் வற்றி வருகிறது.

ஏற்கனவே, கோத்தகிரி நகரில் தண்ணீர் தட்டுப்பாடு பிரச்னை அதிகரித்துள்ளது. வாரம் அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை, சில மணிநேரம் மட்டுமே தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது.

இதனால், நகர மக்கள் தண்ணீர் தேவையை பூர்த்திச்செய்ய முடியாமல் திணறி வருகின்றனர். பேரூராட்சி நிர்வாகம், அணையை துார்வாரி ஆழப்படுத்தாததால், கடந்த மாதம் பெய்த மழைநீரை முழுமையாக சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில், கோத்தகிரி நகரில், தண்ணீர் பிரச்னை விஸ்வரூபம் எடுக்க வாய்ப்புள்ளது. மழை தீவிரமடைவதற்கு முன், அணையை துார்வாரி சேறு சகதிகளை வெளியே எடுத்தால் மட்டுமே, மழைநீரை முழுமையாக சேமிக்க முடியும். எனவே, பேரூராட்சி நிர்வாகம், நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தேயிலை ஏலத்தில் 92 சதவீத விற்பனை

குன்னூர்: குன்னூர் தேயி லை ஏலத்தில், 92 சதவீத துாள் விற்பனையானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில் விற்பனை எண், 33க்கான ஏலம் நடந்தது. 11 லட்சத்து, 71 ஆயிரம் கிலோ தேயிலை துாள் இடம் பெற்றது. இதில், இலை ரகம், 8 லட்சத்து 13 ஆயிரம் கிலோ, டஸ்ட் ரகம், 3 லட்சத்து 58 ஆயிரம் கிலோ இருந்தது. 93 சதவீதம் விற்பனையாகி உள்ளது. கடந்த ஏலத்தை விட, 2.50 ரூபாய் ஏற்றம் இருந்தது.

சி.டி.சி., ரகத்தில், உயர்ந்தபட்ச விலையாக, கிலோவுக்கு,183 ரூபாயும், ஆர்தோடெக்ஸ் ரகத்துக்கு, 246 ரூபாயும் கிடைத்தது. சராசரி விலையாக, இலை ரகத்தில் சாதாரண வகை, 76 ரூபாய் முதல், 77 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 98 ரூபாயில் இருந்து, 140 ரூபாய் வரையிலும் ஏலம் போனது.

டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை, 81 ரூபாயில் இருந்து, 86 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 110 லிருந்து, 160 வரையிலும் ஏலம் விடப்பட்டது. மொத்தம், 10 லட்சத்து 15 ஆயிரம் கிலோ, விற்பனையானது. இதன் மதிப்பு, 9.82 கோடி ரூபாய் ஆகும்.

### கரூரில் திடீர் மழை: 29.50 மி.மீ., பதிவு

கரூர்: கரூரில் திடீரென பெய்த மழையில், 29.50 மி.மீ., பதிவானது. கரூர் பகுதியில், கடந்த சில நாட்களாக, கோடை வெயிலை மிஞ்சும் வகையில், வெயில் மக்களை வாட்டி வதைத்தது. இதனால், பகல் நேரங்களில் வாகன ஓட்டிகள் மிகவும் அவதிக்குள்ளாகி வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் பகலில் வெளியின் தாக்கம் அதிகமாக இருந்தது. மாலை, 6 மணிக்கு திடீரென கருமேகங்கள் திரண்டன. பின், மழை ஆரம்பித்து, படிப்படியாக தீவிரமானது. இடியுடன் பெய்த மழையால், சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல ஓடியது. கரூரில் மட்டும், 29.50 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் மழை பதிவாகவில்லை.

### மேட்டூர் அணைக்கு 9,300 கனஅடி நீர்வரத்து

மேட்டூர்: மேட்டூர் அணைக்கு, நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 9,300 கனஅடியாக அதிகரித்தது. கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து காவிரியில் திறக்கப்பட்ட நீர் தொடர்ச்சியாக வருவதால், நேற்று முன்தினம், 7,988 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று, 9,300 கனஅடியாக அதிகரித்தது. நேற்று அணை நீர்மட்டம், 67.170 அடியாகவும், நீர்இருப்பு, 30.30

டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 500 கனஅடி நீர் குடிநீர் தேவைக்காக வெளியேற்றப்பட்டது.

## நெல் விதை விநியோகம்

கீழக்கரை: திருப்புல்லாணி, உத்தரகோசமங்கை வேளாண் விரிவாக்க மையங்களில் அண்ணா 4, கோ 50, கோ 51, என்.எல்.ஆர்., 34449 நெல் ரக விதைகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. தென்னங்கன்று, நிலக்கடலை விதையும் கிடைக்கும். விவசாயிகள் நில உடமை ஆவணங்கள், ரேஷன்கார்டு, ஆதார் அட்டை இவற்றின் நகலை வழங்க வேண்டும்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

ராமநாதபுரம்: சத்திரக்குடி அருகே அ.புத்துாரில் வேளாண் துறை சார்பில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) வெள்ளைச்சாமி தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் செல்வன், அலுவலர்கள் அம்பேத்குமார், சீதாலட்சுமி, துணை அலுவலர் முருகன், உதவி அலுவலர் செல்வராணி ஆகியோர் பேசினர்.

வரிசை நடவின் முக்கியத்துவம், சிறு தானிய சாகுபடி தொழில் நுட்பம், விதை தேர்வு மற்றும் அதிக மகசூல் தொழில்நுட்பம், தேசிய உணவு பாதுகாப்பு திட்ட செயல்பாடு, மானியங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. உதவி வேளாண் அலுவலர் காசிநாத துரை நன்றி கூறினார்.

## விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு கூட்டம்

ராமநாதபுரம்: தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ராமநாதபுரத்தில் நடந்தது. கவுரவத் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். அங்குச்சாமி முன்னிலை வகித்தார். பொதுச்செயலர் ஆதிமூலம், வழக்கறிஞர் ராஜசேகரன், மதுரை தென் மண்டல தலைவர் மதுரை வீரன், செயலர் செங்குட்டுவன் பேசினர்.

மாவட்ட தலைவராக மதுரை வீரன், செயலராக காந்தி, பொருளாளராக மலைச்சந்திரன் உள்ளிட்டோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர். கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்து விட வேண்டும். ஜூன், ஜூலை, ஆக., மாதங்களில் 94 டி.எம்.சி., தண்ணீரை தமிழகத்திற்கு திறந்து விட மத்திய, மாநில

அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பயிர் கடன், கல்விக்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ரூ.1 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்: அக்கரைப்பட்டியில் நடந்த ஏலத்தில், ஒரு கோடி ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது. ராசிபுரத்தில் உள்ள, ஆர்.சி.எம்.எஸ்., சொசைட்டி சார்பில், அக்கரைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வளாகத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இதில், பாலமேடு, பாலப்பட்டி, தொட்டியப்பட்டி, அக்கரைப்பட்டி, சவுதாபுரம், மாமுண்டி உள்பட பல கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தினர். அதேபோல், அவினாசி, அன்னூர், கொங்கணாபுரம், ஆத்தூர், இடைப்பாடி, சேலம், ஈரோடு போன்ற பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். நேற்று முன்தினம் நடந்த, பருத்தி ஏலத்துக்கு சுரபி ரக பருத்தியை விவசாயிகள் கொண்டு வந்து குவித்தனர். இந்த ஏலத்தில், 4,357 சுரபி ரக பருத்தி மூட்டைகள், 60 கிலோ கொண்ட, ஒரு குவிண்டால் குறைந்த பட்ச விலையாக, 5,899 ரூபாய், அதிகபட்சமாக, 6,422 ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. மொக்கம், ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## 620 மெ.டன் சான்று விதைகள் வழங்க செயல் திட்டம் தயார்

நாமக்கல்: "எண்ணெய் வித்து பயிர்கள், 620 மெ.டன், தரமான சான்று விதைகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்க செயல் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது," என, மாவட்ட விதை சான்று உதவி இயக்குனர் ஜெகதீசன் கூறினார்.

தமிழ்நாடு அரசு விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு துறை சார்பில், தரமான சான்று விதைகள் உற்பத்தி நடைமுறைகள் குறித்த பயிற்சி முகாம், நாமக்கல்லில் நடந்தது.மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் ஜெகதீசன் பேசியதாவது: தமிழகத்தில், விவசாயிகளின் உற்பத்தியை இரு மடங்காகவும்,

வருமானத்தை மும்மடங்காகவும் உயர்த்த, தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதற்கு மிக அத்தியாவசியமான இடுபொருள், தரமான சான்று விதையாகும். தரமான சான்று விதைகள் உற்பத்தி செய்ய, விதைப்பண்ணை பதிவு, வயலாய்வு, விதைநேர்த்தி செய்தல் மற்றும் விதை மாதிரிகள் எடுத்தல் போன்ற உற்பத்தி தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். மாவட்டத்தில் நெல் பயிரில், 67 ஹெக்டேர், சிறுதானியங்கள், 36 ஹெக்டேர், பயறுவகை பயிர்கள், 280 ஹெக்டேர், பருத்தி, 7 ஹெக்டேர், எண்ணெய் வித்து பயிர்கள், 428 ஹெக்டேர் பரப்பில் ஆதாரம் மற்றும் சான்று விதைப்பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. விதைப்பண்ணைகள் மூலம், நெல், 169 மெ.டன், சிறுதானியங்கள், 36 மெ.டன், பயறுவகை பயிர்கள், 200 மெ.டன், பருத்தி, 3.5 மெ.டன் மற்றும் எண்ணெய் வித்து பயிர்கள், 620 மெ.டன், தரமான சான்று விதைகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் சான்று விதைகள் வழங்கிட செயல் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சில்லாங்காடு ஏரி நிரம்பியதால் மகிழ்ச்சி

பள்ளிபாளையம்: மேட்டூர் கிழக்குகரை வாய்க்காலில், குடிநீருக்கு திறந்தவிடப்பட்ட தண்ணீரால், சில்லாங்காடு ஏரிக்கு தண்ணீர் வந்துள்ளது.

நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கவும், கிணற்றில் தண்ணீர் ஊற்று அதிகரிக்கவும், கடந்த, 7ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து, கிழக்குகரை வாய்க்காலில், 500 கன அடி தண்ணீர், 15 நாட்களுக்கு திறந்து விடப்பட்டது. இதனால், பள்ளிபாளையம் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விளை நிலங்களில், விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சினர். தொடர்ந்து, நிலத்தடி நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. இதேபோல, கிணற்றிலும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. விளைநிலங்களுக்கு தண்ணீர் விட்டது போக, உபரி நீர் அருகில் உள்ள ஏரி, குட்டை போன்றவற்றிற்கு திருப்பி விடப்பட்டது. இதில், சில ஏரி மற்றும் குட்டைகளுக்கு தண்ணீர் அதிகளவு வந்துள்ளது. பள்ளிபாளையத்தில் முக்கியமான சில்லாங்காடு ஏரிக்கு, தண்ணீர்

வந்துள்ளது. கடந்த, ஐந்து மாதங்களாக வறண்டுபோன ஏரிக்கு, தற்போது தண்ணீர் வந்துள்ளதால், அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ரூ.30 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை, ஆர்.சி.எம்.எஸ்.,ல், 30 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது. நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ்.,ல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சம், 100 கிலோ மூட்டை, 10 ஆயிரத்து, 22 ரூபாய், குறைந்தபட்சம், 7,188 ரூபாய்க்கும் விலை போனது. உருண்டை ரகம் அதிகபட்சம், 8,500 ரூபாய், குறைந்தபட்சம், 6,819 ரூபாய்க்கு விற்பனையானது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 20 ஆயிரத்து, 12 ரூபாய், குறைந்தபட்சம், 15 ஆயிரத்து, 555 ரூபாய்க்கும் ஏலம் போனது. விரலி, 470 மூட்டைகளும், உருண்டை, 98, பனங்காலி, 10 என மொத்தம், 578 மூட்டைகளும், 30 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரம், 1,120 மூட்டைகள், 55 லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகின. தற்போது, வரத்து பாதியாக குறைந்தது. அதேபோல், விற்பனையும், 30 லட்சம் ரூபாயாக குறைந்தது.

## நீர் மேலாண்மை தொழில்நுட்பம்



மதுரை தென்பழஞ்சியை சேர்ந்தவர் முன்னோடி விவசாயி சிவராமன். இவர் நீர் மேலாண்மை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குறைந்த நீரில் மிளகாய் விளைவிக்கிறார். ஊடுபயிராக அகத்தி கீரையை பயிரிட்டு லாபம் ஈட்டி வருகிறார். மழையின்றி வறண்ட பூமியில் நெல் பயிரிட இயலாது. நெல்லிற்கு அதிகளவு தண்ணீர் தேவை என்பதால் மாற்றுப்பயிர் குறித்து சிவராமன் யோசித்தார். விளைவு நீர் மேலாண்மை தொழில்நுட்பம் இவருக்கு கை கொடுத்தது. அவர் கூறியதாவது: ஒரு கிலோ நெல் சாகுபடி செய்ய 2500 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே குறைந்தளவு நீரில் அதிக மகசூல் பெற ஒரே வழி நீர் மேலாண்மை தொழில்நுட்பம் மட்டுமே. பொதுவாக மழை பெய்தால் மட்டுமே கண்மாய்கள் நிரம்பும். சென்ற ஆண்டு பருவமழை பொய்த்ததாலும், இந்த ஆண்டும் போதிய மழை இல்லாததாலும் கண்மாய் பாசனத்தை நம்பிய விவசாயிகளுக்கு சாகுபடி செய்ய வழியில்லை. எனது வயலில் உள்ள கிணற்றில் சிறிதளவு தண்ணீர் உள்ளது. அதை நம்பி 60 சென்டில் மிளகாய் பயிரிட்டேன். ஊடுபயிராக அகத்தி கீரையை நடவு செய்தேன். அகத்தி மூலம் மாதம் 2000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. அகத்தி பயிரிட்டுள்ளதால், வெயில் தாக்கத்திலிருந்து மிளகாயை பாதுகாக்கிறது. தரையும் ஈரமாக இருந்து கொண்டே இருக்கும். வாரம் இருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். மிளகாய் ஆறு மாதங்கள் காய்க்கும். மிளகாய்க்கு நல்ல விலை உள்ளது. அனைத்து செலவுகளும் போக 20 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். தவிர அகத்தியிலும் நல்ல வருமானம் உள்ளது. சொட்டுநீர் பாசன முறையில் மிளகாய், அகத்தியை அடுத்து சிறு தானியங்களை பயிரிட உள்ளேன் என்றார். தொடர்புக்கு 99652 53329.

**- ஏ.ஆர்.குமார், மதுரை.**

**மரத்தை நடவு செய்யும் பேக்கிங் தொழில்**



'உழைப்புக்கு ஓய்வு இல்லையே' என மண்வெட்டியை கையில் பிடித்து மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. துவக்கத்தில் பாலிதீன் பைகளில் மண் நிரப்பி பூச்செடிகளை வளர்த்தார்.

செடிகளுக்கு உரமிட்டு, தண்ணீர் ஊற்றி பக்குவமாக வளர்த்ததால் பூக்கள் பூத்து குலுங்கின. படிப்படியாக பூச்செடிகளுடன், மரக்கன்றுகளையும் வளர்த்தார். உழைப்பை மூலதனமாக கொண்டு படிப்படியாக முன்னேறி நர்சரி கார்டன் அமைத்தார்.

மூன்று ஆண்டுகளில் பிரபலமடைந்தார். இவரது நர்சரியில் 27 நட்சத்திர மரங்கள், 500-க்கும் மேற்பட்ட மரக்கன்று வகைகள், 300-க்கும் மேற்பட்ட செடி வகைகள் அணி வகுத்து நிற்கின்றன.

அவர் கூறியது: மரங்கள் வளர்க்க ஆர்வமாக இருந்தாலும் தரமான கன்று கிடைப்பதில் தட்டுப்பாடு உள்ளது. அதை தவிர்க்க பொழுது போக்காக இந்த தொழிலை ஆரம்பித்தேன். இயற்கை விவசாய முறையில் நர்சரி பண்ணை வைத்துள்ளேன். அரிய வகை மூலிகை, மரம், செடி, கொடி வகைகளை வளர்க்கிறேன். செடியாக மட்டுமன்றி உடனே பலன் தரும் வகையில் மரங்களையும் பேக்கிங் முறையில் நடவு செய்து தருகிறேன். ஆன்லைன் பதிவு மூலம் வெளி மாவட்டம், வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வருகிறேன். விவசாயிகளுக்கு குறைந்த விலையில் தரமான கன்றுகளை தர வேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம், என்றார். தொடர்புக்கு 98430 80275.- **டி.செந்தில்குமார், காரைக்குடி.**

**கால்நடை வளர்ப்பில் ஒழியுமா மூட பழக்கம்**



கால்நடை வளர்ப்பில் மூடப்பழக்க வழக்கங்களை இந்த நூற்றாண்டிலும் விவசாயிகள் பின்பற்றுவது ஆச்சரியத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால் கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. லாபமும் கணிசமாக குறையும்.

கால்நடைகளுக்கும் எல்லா உணர்வுகளும் உண்டு. அறிவியலும் நவீன மருத்துவமும் முன்னேறி வரும் இக்காலத்தில் தவறான கருத்துக்களாலும், மூட நம்பிக்கைகளாலும், கொடிய மருத்துவம் செய்தல், தகுதியற்றவர்களால் மேற்கொள்ளும் மருத்துவத்தை தவிர்த்தல் வேண்டும். இச்செயல்களை விவசாயிகள் எக்காரணம் கொண்டும் ஊக்குவிக்கக்கூடாது.

நாவரஞ்சி எடுத்தல்: கிராமங்களில் 'நாவரஞ்சி எடுத்தல்' என்ற பழக்கம் உண்டு. இம்முறைப்படி தீவனம் சாப்பிடாத கால்நடைகளின் நாக்கை வெளியே இழுத்து கத்தியால் சுரண்டி நாக்கின் மேலும், கீழும் உள்ள திசுக்களை அழித்து கொன்று விடுவார்கள். இதனால் வலி ஏற்பட்டு கால்நடைகள் அறவே தீவனம் சாப்பிடாது. இரண்டு நாட்கள் கழித்து தீவனம் சாப்பிட துவங்கும். நாக்கில் நாவரஞ்சி விழுந்து விட்டது என இந்த கொடூர வைத்தியத்தை கையாள்கின்றனர்.

செலைக்குத்துதல்: 'செலைக்குத்துதல்' எனும் வழக்கம் நாவரஞ்சி எடுத்தலை விட கொடுமையானது. இதன்படி தீவனம் சாப்பிடாத கால்நடையின் நாக்கினை வெளியே இழுத்து பிடித்து கொண்டு, நாக்கின் அடிப்பாகத்தில் காணும் ரத்தக் குழாயினை கூரிய ஊசி கொண்டு குத்தி விடுவார்கள். குத்திய இடத்தில் இருந்து ரத்தம் வெளியேறும். பின் வைக்கோலினால் கயிறு போல் தயார் செய்து நாக்கின் அடியில் இருந்து மேல்தாடையோடு சேர்த்து

இறுக்கி கட்டி விடுவார்கள். இதனால் கால்நடைகள் இரண்டு நாட்களுக்கு நாக்கை அசைக்க முடியாமலும், எச்சில் விழுங்க முடியாமலும் கொடூரமான துயரத்திற்கு ஆளாகும். பின்னர் தீவனம் சாப்பிட ஆரம்பிக்கும்.
வைக்கோல் எரிப்பு: அதிக நேரம் காளைகள் வேலை செய்வதாலும் தண்ணீர் குடிக்காமலும் இருந்தால் உடலில் நீர்ச்சத்து அளவு குறைந்து, அவை கீழே விழுந்து விடும். இதனை அறியாமல் மாடுகளின் அருகில் வைக்கோலை போட்டு கொளுத்துவார்கள். கண்களில் மிளகாய் பொடியை தூவுவார்கள்.
வாலை பற்களால் கோரமாக கடித்து புண் ஏற்படுத்துவர். தார் குச்சியின் நுனியால் மர்ம உறுப்பில் வலி எடுக்கும்படி குத்துவார்கள். இதனால் சில மாடுகள் சூடு தாங்காமலும், மரண வலியை தாங்க முடியாமல் கடும் துயரத்துடன் எழுந்து விடுகின்றன. சில நேரங்களில் இப்படி செய்யும்போது அவை நினைவிழந்து இறந்து விடுவதும் உண்டு.

சுண்ணாம்பு பூச்சு: மாடுகள் சண்டையிடும்போதும், விபத்துக்களாலும் கொம்பு முறிவதும், கொம்பு கழன்று விழுவதும் இயற்கை. இதற்கு வைத்தியம் செய்கிறோம் என்ற பெயரில் கருப்பட்டி மற்றும் சுண்ணாம்பினை சேர்த்து அரைத்து காயமடைந்த கொம்பில் பூசி விடுவார்கள். போதாக்குறைக்கு தலை முடியை கொத்தாக எடுத்து கொம்பை சுற்றிலும் கட்டி விடுவர். பத்து நாட்கள் கழித்து முடியை பிய்த்து வலுக்கட்டாயமாக இழுக்கும் போது கால்நடைகள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவிக்கின்றன.

எருக்கம்பால் நச்சு: கறவை மாடுகள் சினைப்பிடிக்கவில்லை என்ற காரணத்தினால் கர்ப்பப்பையின் வாய்ப்பகுதியான பெண் உறுப்பில் எருக்கம் பாலை இடுவார்கள். சில கால்நடைகள் நோயின் காரணமாகவோ அல்லது நச்சு தாவரங்களை உண்பதாலோ சோர்ந்தும், உடல் சிலிர்ப்புடன் காணப்படும். இதனை தவறாக புரிந்து கொண்டு ஓணான், மாட்டின் மேல் விழுந்துள்ளது எனக்கருதி துண்டு துணியை கழுத்தில் இறுக்கி கட்டி விட்டு மூச்சு விட முடியாமலும், நாக்கை வெளியே தள்ளும் அளவுக்கு கொடுமை செய்வர்.
வெந்த புண்ணில் வேல்: கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கினால் கால் குளம்புகளில் புண்கள் ஏற்படும். இப்புண்ணில் பினாயில் கிருமி நாசினியை ஊற்றுகின்றனர். இதனால் புண் வெந்து மாடுகளுக்கு மேலும் வேதனையை தரும். இக்கொடூரமான சிகிச்சை முறைகள் எல்லாம் முறையானவை அல்ல. இவற்றால் ஏற்படும் வேதனைகளை வாயிருந்தால் கால்நடைகள் சொல்லி நொந்து சாபமிட்டிருக்கும். இக்கொடூர காரியங்களில் நெஞ்சில் ஈரமில்லாத மனிதர் சிலர் ஈடுபடும்போது, "நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலை கெட்ட மனிதரை

நினைத்து விட்டால்..." என சுப்பிரமணிய பாரதியாரின் வரிகள் நினைவுக்கு வருகிறது.

**- டாக்டர் வி.ராஜேந்திரன், முன்னாள் இயக்குனர், கால்நடை பராமரிப்பு துறை, நத்தம்**

### மண் மகத்துவம் அறியும் மண் ஆய்வு



மண்ணில் உள்ள பிரச்னைகளை அறிந்து சீர்திருத்தம் செய்யவும், சத்துக்களின் நிலை அறிந்து சமச்சீர் உரமிடவும், உரச் செலவை குறைத்து மகசூலை அதிகரிக்கவும் மண் ஆய்வு அவசியம். உரத்தேர்வு, உரமிடும் காலத்தை அறிந்திடவும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் பெற்றிடவும் மண் ஆய்வு அவசியமாகிறது.

மண் ஆய்வுக்கு ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் இருந்து மண் மாதிரி சேகரிக்க வேண்டும். மரநிழல், வரப்பு வயலோரம், தண்ணீர் தேங்கும் பகுதி, எரு, உரம் கொட்டிய இடம், உரமிடப்பட்ட நிலம் ஆகியவற்றில் மண் மாதிரி சேகரிக்கக்கூடாது. நிலத்தை 'வி' வடிவில் வெட்டி மண் மாதிரி சேகரிக்க வேண்டும்.நெல், கம்பு பயிரிட நிலத்தில் பல இடங்களில் மண் மாதிரி சேகரிக்க வேண்டும். நிலக்கடலைக்கு அரை அடி ஆழம், பருத்தி, கரும்பு 4 அடி ஆழம், வளர்ந்த தென்னை பழப்பயிர் 2 அடி ஆழம் வரை நிலத்தை வெட்டி மண் மாதிரி சேகரிக்க வேண்டும். வெட்டப்பட்டுள்ள குழியின் இரு பக்கங்களிலும் கீழாக அரை அங்குல கனத்தில் மண்ணை செதுக்கி எடுக்க வேண்டும். சேகரித்த மண்ணை நன்றாக கலந்து கால்பங்கீட்டு முறையில் துணிப்பை, பாலிதீன் பையில் சேகரிக்க வேண்டும்.

நுண்ணுாட்ட மண் ஆய்வுக்கு மண்வெட்டி, தட்டு போன்ற உலோகப் பொருட்களை பயன்படுத்தக் கூடாது. மரக்குச்சி கொண்டு மண்ணை எடுக்க வேண்டும். பாசனநீர் பரிசோதனைக்கு ஒரு லிட்டர் தண்ணீர் எடுத்து வர வேண்டும். மண் மாதிரி ஆய்வுக் கட்டணம் 20 ரூபாய் (பேரூட்டம் 10 ரூபாய், நுண்ணுாட்டம் 10 ரூபாய்). பாசன நீர் ஆய்வு கட்டணம் 20 ரூபாய். பழப்பயிர் நடுவதற்கு முன் 4 க்கு 3 என்ற அளவில் குழி வெட்டி அடிக்கு ஒரு மண் மாதிரி வீதம் குழிக்கு நான்கு மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும்.

**- சே.கனகராஜ், திட்ட இயக்குனர், வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை, மதுரை.**

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வாழைப்பழத்தின் மருத்துவ குணங்கள்



முக்கனிகளில் ஒன்று வாழைப்பழம். வாழைப்பழங்களில் பலவகைகள் உண்டு. எல்லாவகை வாழைப்பழங்களிலும் பலவகை சத்துக்கள் உள்ளன. அதுமட்டுமின்றி எல்லாக் காலங்களிலும் , எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய பழம் வாழைப்பழம், இதை ஏழைகளின் கனி என்றும் கூறுவார்கள்.

**பூவன் வாழைப்பழம்**

பூவன் வாழைப்பழம் எல்லா இடங்களிலும் பரவலாகக் கிடைக்கும் பழம். இது ஜீரண சக்தியை உண்டாக்கும். தினமும் உணவிற்குப்பின் பூவன் வாழைப் பழம் ஒன்றை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் உண்டாகாது.

**பச்சை வாழைப்பழம்**

பச்சை வாழைப்பழம் நல்ல குளிர்ச்சியை தரும். கோடைக் காலங்களில் தாராளமாக உண்ணலாம். வாத நோயாளிகள் குறைத்துக் கொள்வது நல்லது. இது உடல் உஷ்ணத்தை குறைக்கும்.

**மொந்தன் வாழைப்பழம்**

மொந்தன் வாழைப்பழம் உடலுக்கு நல்ல குளிர்ச்சியை தரும். காமாலைக்கு இது சிறந்த பழம்.

**ரஸ்தாளி வாழைப்பழம்**

ரஸ்தாளிப் பழம் சுவை மிக்கதாகும். பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை உண்ணக்கூடிய பழம். குழந்தை வளர்ச்சிக்கு தேவையான அனைத்து சத்துக்களும் உள்ளன. இப்பழத்தை தினமும் உண்டு வந்தால் இருதயம் பலப்படும்.

**நேந்திரம் வாழைப்பழம்**

நேந்திரம் பழம் என அழைக்கப்படும் வாழைப் பழம் கேரளாவில் அதிகம் விரும்பி உண்ணப்படுகிறது. காச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இப்பழத்தில் ஒன்றும், முட்டை ஒன்றும் உண்டுவர, காசநோய் விலகி உடல் புஷ்டிக்கும். சிறு குழந்தைகளுக்கு, ஆறு மாதத்திற்கு மேல் நன்றாகப் பழுத்த நேந்திர பழத்தை சிறிது உப்பிட்டு, வேகவைத்து நன்றாக பிசைந்து தரலாம். இது நல்ல ஊட்டச் சத்தாகும். ஜீரணிக்க சற்று நேரமாகும் என்பதால் உடற்பயிற்சி செய்பவர்களுக்கு உகந்தது.

**செவ்வாழைப்பழம்**

செவ்வாழைப் பழம் கேரளா மற்றும் குமரி மாவட்டங்களில் அதிகம் காணப்படுகிறது. உடலுக்கு நல்ல குளிர்ச்சியை தரும். நரம்புத் தளர்ச்சியை

போக்கும். இவ்வகைப் பழத்தை உடல் மெலிந்தவர்கள் தொடர்ந்து உண்டு வந்தால், உடல் பருமனடையும், வைட்டமின் A அதிகம் உள்ளதால் கண்ணுக்கு பலம் தரும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். தோல் வியாதிகளையும் குணப்படுத்தும். அதிகம் பேதி கண்டவர்கள் இப்பழத்தை பொரிகடலையுடன் சேர்த்து உண்டால் பேதி நிற்கும். ஏதாவது ஒரு வாழைப் பழத்தை தினமும் உணவிற்குப் பின் உண்டு வந்தால் உடல் ஆரோக்கியம் அடையும்.

## சிறுதானியம் பயிர் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் ஒன்றியம் ஜி.அரியூரில் வேளாண்மைத்துறை சார்பில் ஆட்மா திட்டத்தின் கீழ் பிரதான்மந்திரி கிரிஷிசஞ்சயி யோஜனா திட்டத்தின் கீழ் சிறுதானியம் பயிர் உற்பத்தி பற்றிய வேளாண்மை விரிவாக்க பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துரையாடல் நடைபெற்றது. சுமார் 300 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சிறுதானியங்களான சோளம், மக்காச்சோளம், கம்பு, ராகி, தினை, வரகு பயிரிடப்பட்டுள்ள விவசாயிகளிடையே சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட இந்த கலந்துரையாடலில் 75க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி விவசாயிகளை வரவேற்று சிறுதானிய உணவின் அவசியம், பயன்கள், சத்துக்கள் பற்றி விளக்கி கூறினார். அதனை தொடர்ந்து கம்பு சாகுபடியில் உற்பத்தியை பெருக்க ஏற்ற ரகங்கள், விதையளவு, விதை நேர்த்தி, விதை கடினப்படுத்துதல், நாற்றங்கால் அமைத்தல், கம்பு நடவு, பயிர் இடைவெளி, நீர், களை மற்றும் உரமேலாண்மை பற்றி வேளாண்மை அலுவலர் ராஜா விளக்கினார். கம்பில் உயிர் உரங்கள் விதை நேர்த்தி குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்க பயிற்சியும் அளித்தனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் நாராயணசாமி நுண்உரம், பயன்பாடுகள் பற்றியும், ஊட்ட மேம்பாடு பற்றியும் தொழுவுரம் தயாரித்தல் போன்ற தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், சிறுதானியத்தில் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லி, பூஞ்சாண் கொல்லிகள் பற்றி உதவி வேளாண்மை அலுவலர்கள் ஞானவேல், குமார், மகாதேவன், மணிவேல், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கூறினர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சாட்டர்ஜி நன்றி கூறினார்.

## மோளையானூரில் பயறு வகை சாகுபடி விழிப்புணர்வு முகாம்

பாப்பிரெட்டிப்பட்டி : மோளையானூர் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறு வகை தொழில்நுட்ப சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. பாப்பிரெட்டிப்பட்டி அருகே மோளையானூர் கிராமத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறு வகை தொழில்நுட்ப சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. அட்மா திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரவி வரவேற்றார்.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்து, பயறு வகைகளை உற்பத்தி செய்வதன் அவசியம் குறித்தும், ோவளாண்மை துறையின் மூலம் வழங்கப்படும் அரசு மானிய திட்டங்கள் குறித்தும் விவசாயிகளிடையே பேசினார். வேளாண்மை அலுவலர் அருணன் பயறு வகை சாகுபடி, புதிய தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கம் அளித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் சக்தி பயறு வகைகளில் விதை நேர்த்தி செய்தல், 2சதவீதம் டிஏபி கரைசல் தெளிப்பதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தார். முகாமிற்கான ஏற்பாடுகளை அட்மா திட்டத்தின் உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம், நீர் பிடிப்பு பகுதி அலுவலர்கள் ஜெயசத்தி, வெங்கடேஷ் ஆகியோர் செய்திருந்தனர். இதில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## 575 மூட்டை மஞ்சள் ரூ.30 லட்சத்திற்கு ஏலம்

ராசிபுரம் : நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை நாமகிரிப்பேட்டையில் இயங்கி வருகிறது. இங்கு நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. ஏலத்திற்கு சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் விரலி, உருண்டை, பனங்காளி ரக மஞ்சள் 575 மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். இதில் விரலி ரகம் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.10,022க்கும், குறைந்தபட்சம் ரூ.7,188 வரையும் விற்பனையானது. உருண்டை ரகம் அதிகபட்சம் ரூ.8,500க்கும், குறைந்தபட்சம் ரூ.6,819 வரையும் ஏலம் போனது. பனங்காளி ரகம் அதிகபட்சம் ரூ.20,012க்கும், குறைந்தபட்சம் ரூ.5,555க்கும் விற்பனையானது. இதன் மூலம் மொத்தம் 575 மூட்டை மஞ்சள் □30 லட்சத்துக்கு விற்பனையானது.

### மாடுகளின் விலை உயர்வு

சேந்தமங்கலம் : நாமக்கல் மாவட்டம், புதன்சந்தையில் கூடும் மாட்டுச்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்றது. திங்கட்கிழமை இரவு முதல் செவ்வாய் மதியம் வரை இந்த சந்தை கூடுவது வழக்கம். இங்கு மாடுகளை வாங்க கோவை, பொள்ளாச்சி, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வருகின்றனர். நேற்று கூடிய சந்தையில் மழையின் காரணமாக வெளியூர்களிலிருந்து குறைந்த அளவே மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது.

கேரளா, பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அதிக அளவில் வியாபாரிகள் வந்திருந்ததால், மாடுகளின் விலை உயர்ந்தது. கடந்த வாரம் ரூ.36 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு, இந்த வாரம் ரூ.37 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. இதே போல கடந்த வாரம் ரூ.44 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு □45 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. மேலும் ரூ.10 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி ரூ.11 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது.

### வேளாண் குறைதீர் கூட்டம்

ஈரோடு, : ஈரோடு மாவட்ட வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 26ம் தேதி காலை 11 மணிக்கு துவங்குகிறது. 11.30 மணி வரை மனு கொடுக்கலாம். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சனைகள் குறித்து கருத்துகள் தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 மணி முதல் 1.30 மணி முடிய அலுவலர்கள் பதிலளித்து விளக்கம் தருவார்கள். விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் பிரபாகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கோமாரி தடுப்பூசி ஆய்வு கூட்டம்

திருப்பூர், :திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கால்நடை பாராமரிப்பு துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் தொடர்பான அனைத்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி, தலைமையில் நேற்று நடைபெற்றது.கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி பேசியதாவது:கோமாரி நோய், கால் மற்றும் வாய் நோய் அல்லது காணை என்றும்

அழைக்கப்படும். இந்நோய் நம் நாட்டில் கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயினால் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலை திறன் குறைவு, கறவை மாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுகிறது. மேலும், இளங்கன்றுகளின் இறப்பு சதவீதம் அதிகமாக ஏற்பட வாய்ப்பு உள்ளன. இந்நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாத்துகொள்வதற்காக, திருப்பூர் மாவட்டத்தில் வரும் செப்டம்பர் 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை 21 நாட்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி பணியும், வரும் 26ம் தேதி மற்றும் 27ம் தேதி ஆகிய நாட்களில் கறவை பசுக்களுக்கு, இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் அனைத்து பகுதிகளிலும் நடைபெறவுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.தெற்கு மாவட்ட

## 26ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் காவிரியில் கழிவுநீர் கலப்பு கிணறுகளிலும் பாதிப்பு

கரூர் : கரூர் மாவட்டத்தில் ஆகஸ்ட் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் தலைமையில் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாக கூட்டரங்கில் வரும் 26ம் தேதி 11மணிக்கு நடைபெறுகிறது. கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டுமே விவாத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரூரில் பெய்த மழை 29.50 மி.மீ பதிவு

கரூர் : கரூர் நகரில் நேற்று முன்தினம் ஒரு மணி நேரம் பெய்த மழையின் அளவு 29.50மிமீட்டராக பதிவானது. தென்மேற்கு பருவமழை சீசன் காலமான ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலக் கட்டத்தில் குறிப்பிட்டதக்க மழை பெய்யாமல் இருந்தாலும் இந்த சீசனுக்கு தேவையான மழை இலக்கை தாண்டி பெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கடந்த 20 நாட்களுக்கும் மேலாக கரூர் மாவட்டம் முழுதும் சுட்டெரிக்கும் வெயில் வாட்டி வதைக்கிறது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை 5மணி முதல்

6மணி வரை ஒரு மணி நேரம் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் வெப்பமயமாக காணப்பட்ட கரூர் குளிர்ச்சிக்கு மாறியது.

மாவட்டத்தில் அரவக்குறிச்சி, க.பரமத்தி, குளித்தலை, கரூர், அணைப்பாளையம், தோகைமலை, பஞ்சப்பட்டி, பாலவிடுதி, கடவூர், கிருஷ்ணராயபுரம், மயிலம்பட்டி, மாயனூர் ஆகிய பகுதிகளில் மழையின் அளவு பதியப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் கரூர் பகுதியில் மட்டும் 29.50மிமீ மழை பதிவாகியுள்ளது. மற்ற பகுதிகளில் மழை பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் சராசரி 2.46

## கொள்முதல் நிலையங்களில் டிகேஎம் 9 ரக நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும்

நாகை : நாகை மாவட்ட நேரடி கொள்முதல் நிலையங்களில் டிகேஎம் 9 ரக நெல்லை கொள்முதல் செய்ய உத்தரவிட ேவண்டுமென தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழக உணவுத்துறை அமைச்சர், உணவுத்துறை செயலாளர், உணவு மற்றும் வழங்கல்துறை ஆணையர், நாகை கலெக்டருக்கு தரங்கம்பாடி தாலுகா சங்கரன்பந்தலை சேர்ந்த காவிரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்க பொது செயலாளர் கோபி கணேசன் ேகாரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

அதில் நாகை மாவட்டத்தில் 1.50 லட்சம் எக்டேரில் நஞ்சை சாகுபடி பரப்பில் 70,000 ஏக்கரில் மட்டுமே நடப்பாண்டு குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவைகளில் 95 சதவீதம் மயிலாடுதுறை வருவாய் கோட்டத்தில் பம்ப்செட்களின் மூலம் நிலத்தடி நீரை கொண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏடிடி 43, ஏடிடி 45, ஏடிடி 36, ஐஆர் 50, சிஓ 51, அண்ணா 4 போன்ற நெல் ரகங்களை வேளாண் அதிகாரிகள் குறுவை சாகுபடிக்கு ஊக்குவித்தாலும், விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்வது டிகேஎம் 9 நெல் ரகத்தை மட்டுமே.

ஏனென்றால் இந்த ரகம் மட்டுமே குறுவையில் வறட்சியை தாங்கி விளையக்கூடியது. உர நிர்வாகத்தில் குறைந்த செலவே போதுமானது. ஆனால் அதிக மகசூல் தர கூடியது. அதனால் தான் 30 ஆண்டுகளாகியும் விவசாயிகளால் டிகேஎம் 9 நெல் ரகத்தை விட முடியவில்லை.

15,000 ஏக்கர் பரப்பளவில் டிகேஎம் 9 சாகுபடி செய்யப்பட்டு 22.5 ஆயிரம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு அறுவடைக்காக காத்திருக்கிறது. சில இடங்களில் அறுவடை செய்யப்பட்டு சரியான விலை கிடைக்காததால் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 70 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டும் சன்ன ரகங்களை மட்டுமே கொள்முதல் செய்ய அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதால் டிகேஎம் 9 நெல்லை சாகுபடி செய்த விவசாயிகள், நெல்லை விற்க முடியாமல் பரிதாப நிலையில் உள்ளனர். இதை பயன்படுத்தி கொண்டு வியாபாரிகள் 62 கிலோ கொண்ட மூட்டைக்கு ரூ.760க்கும் குறைவாக கேட்டு கொள்ளை லாபம் அடிக்கின்றனர்.

கடந்தாண்டு சம்பாவுக்காக திறக்கப்பட்ட அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மோட்டா ரகம் சிப்பம் (40 கிலோ) ரூ.588க்கு கொள்முதல் செய்யப்பட்டது. அதே விலையில் நடப்பாண்டு குறுவை மோட்டா ரகமாக டிகேஎம் 9 (60 கிலோ) சிப்பம் நெல்லை ரூ.882க்கு வியாபாரிகள் வாங்க வேண்டும். ஆனால் 62 கிலோ மூட்டைக்கு ரூ.760க்கு வியாபாரிகள் வாங்கி கொள்ளை லாபம் அடிக்கின்றனர்.

இதற்கு காரணம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் டிகேஎம் 9 நெல்லை கொள்முதல் செய்யாததாகும். இதனால் மூட்டைக்கு ரூ.110 முதல் ரூ.130 வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்துக்கான சாகுபடி செலவு அதிகரித்து கொண்டே செல்லும்போது சென்றாண்டு அரசு அறிவித்த விலையைகூட விவசாயிகள் பெற முடியாமல் தவித்து வருகின்றனர்.

இதனால் டிகேஎம் 9 நெல் விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு போதிய விலை கிடைக்காமல் மன உளைச்சலில் உள்ளனர். அவர்கள் தற்கொலைக்கு தள்ளப்படும் முன் தமிழக அரசு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் டிகேஎம் 9 ரக நெல்லை கொள்முதல் செய்ய உத்தரவிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்ட விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை குறைவான செலவில் அதிக மகசூல் கிடைக்கும் 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட இந்நெல் ரகத்தை கைவிடுங்கள் என்று சொல்லும் அரசு மற்றும் வேளாண் துறையினர் 30 ஆண்டுகளுக்கு பின்னரும் டிகேஎம் 9 போன்ற ஒரு நெல் ரகத்தை அதாவது குறைவான பூச்சி தாக்குதல், நோய் எதிர்ப்பு சக்தி, குறைவான செலவு, வறட்சியை தாங்க கூடியது, அதிக மகசூல் தரக்கூடிய இதை போன்ற அல்லது இதற்கு ஈடான ஒரு ரகத்தை இன்னமும் கண்டுபிடிக்க முடியாதது வேதனைக்குரியது. எனவே தான் வேளாண் துறையினர் டிகேஎம் 9 நெல் ரகத்துக்கு மானியம் இல்லையென தெரிவித்தும்கூட விவசாயிகள் மானியத்தை பெரிதாக நினைக்காமல் மயிலாடுதுறை வருவாய் கோட்டத்தில் 15,000 ஏக்கரில் டிகேஎம் 9 நெல் ரகத்தை சாகுபடி செய்துள்ளனர்.

## பருத்தியை தாக்கும் பப்பாளி மாவுப்பூச்சியை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் அதிகாரிகள் விளக்கம்

நீடாமங்கலம் : பருத்திய தாக்கும் பப்பாளி மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து வேளாண் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர். நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல்துறை பேராசிரியர் ராஜா ரமேஷ், நிலைய ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: பருத்தியை தாக்கும் பப்பாளி மாவு பூச்சியானது மெக்சிகோ நாட்டை பூர்வீகமாக கொண்டது. இதன் தாக்குதல் இந்தியாவில் முதன்முதலாக கோயம்புத்தூர் பகுதியில் 2008ம் ஆண்டு கண்டறியப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி பயிர்களில் தற்போது நிலவும் மிகவும் வறண்ட வானிலை காரணமாக ஒரு சில இடங்களில் மாவுப்பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. வறண்ட வானிலை, அதிகமான வளிமண்டல வெப்பநிலையும் தாக்குதலுக்கான முதன்மையான காரணிகளாகும். காற்று, பறவைகள், நீர் பாசனம், பண்ணை கருவிகளை பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வேறொரு இடத்துக்கு கொண்டு செல்லுவதால் இவை எளிதாக பரவுகின்றன. எறும்புகளின் நடமாட்டத்தை பார்த்து இவற்றின் தாக்குதலை உறுதி செய்யலாம்.

பஞ்சுபோல் படர்ந்த முட்டைகளுடன் கூடிய இப்பூச்சியின் கூட்டங்கள் இலைகள்,

இளம் தண்டுகளில் பரவி காணப்படும். இலை மற்றும் தண்டின் சாறை உறிஞ்சுவதால் இலைகள் சிறுத்து மடங்கி மஞ்சள் நிறமாகி பின்னர் உதிர்ந்து விடும். தாக்கப்பட்ட செடியானது வளர்ச்சியின்றி குட்டையாக காணப்படும். பூச்சிகள் வெளியேற்றும் தேனை உண்பதற்கு எறுப்புகள் செடியின்மேல் ஊர்ந்து செல்வதை காணலாம். மேலும் கேப்னோடியம் என்ற பூஞ்சானம் இலையின் மேற்பரப்பில் படர்வதால் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு மகசூல் குறைந்து விடும்.

இந்த மாவுப்பூச்சியானது பருத்தியை தவிர பப்பாளி, செம்பருத்தி, கத்தரி, வெண்டை, மரவள்ளி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களையும் பாத்தீனியம், துத்தி போன்ற களைகள் உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட தாவரங்களையும் தாக்கி சேதத்தை உண்டாக்குகிறது. வயலில் காணப்படும் களை செடிகளை அழித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த ஆசிரோபேகஸ் பப்பாயே என்ற ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 100 பூச்சிகள் என்ற எண்ணிக்கையில் வெளியிட வேண்டும்.

தாவர பூச்சி கொள்ளிகளான வேப்பெண்ணெய 2 சதவீதம் அதாவது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் அல்லது வேப்பங்கொட்டை கரைசல் 5 சதம் அல்லது மீன் எண்ணெய் சோப் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 25 கிராம் என்ற அளவில் தேவையான அளவு ஒட்டும் திரவம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு டைமீத்தோயேட் 400 மிலி அல்லது பிரபினோபாஸ் 500 மிலி அல்லது தயோடிகார்ப் 250 கிராம் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**மழையின்மையால் குறைந்த நிலக்கடலை விளைச்சல்**

தேவாரம், :போதிய மழையின்மையால் நிலக்கடலை விளைச்சல் சரிவைச் சந்தித்துள்ளது.கோம்பை மலையடிவாரத்தில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் வரை சுமார் 100 ஏக்கர் நிலக்கடலை சாகுபடி நடந்தது. இங்கு விளையும் நிலக்கடலை இயற்கையிலேய அதிக சுவையுடன் இருக்கும் என்பதாலும், எண்ணெய் உற்பத்திக்கு ஏற்றதாக இருக்கும் என்பதாலும் வியாபாரிகள் போட்டிபோட்டு கொள்முதல் செய்வர். இப்போதோ நிலைமை தலைகீழ். காரணம் போதிய மழையின்மையாலும், நிலக்கடலை விவசாயத்திற்கு உரிய ஊக்குவிப்பு இல்லாததாலும் இதன் விவசாய பரப்பு குறைந்து வருகிறது. கடந்த 3 மாதத்திற்கு முன் இயற்கையை நம்பி சாகுபடி செய்த நிலக்கடலை பயிர் நீரின்றி

கருகிப்போனது. தப்பிய நிலங்களில் தற்போது நிலக்கடலை பிடுங்கும் பணி தொடங்கி உள்ளது. சுமா

ர் 25 ஏக்கர் வரையே நிலக்கடலை விவசாயம் கோம்பை பகுதியில் நடக்கிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், “மழையை நம்பி பயிரிடப்படும் நிலக்கடலை போதிய மழையின்மையால் பரப்பு குறைந்து வருகிறது. தற்போது நான்கில் ஒரு பங்கு நிலக்கடலை விவசாயமே நடக்கிறது” என கவலையுடன் தெரிவித்தனர்.